අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/12/01/01/பொது

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2026.05.

சுற்றறிக்கை எண்:- 44/2025

அனைத்து மாகாண தலைமைச் செயலாளர்கள்

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்

அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

அனைத்து தேசிய பாடசாலை அதிபர்கள்

அனைத்து தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்

அனைத்து ஆசிரிய கலாசாலை அதிபர்கள்

அனைத்து ஆசிரிய நிலைய முகாமையாளர்கள்

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசியப் பாடசாலைகள் தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள் மற்றும் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையங்களில் பணிபுரியும் கல்விசாரா பணியாளர்களின் கடமை நேரம்**

1. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசியப் பாடசாலைகள் தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள் மற்றும் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையங்களில் பணிபுரியும் கல்விசாரா பணியாளர்களின் கடமை நேரம் தொடர்பான பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் 9/2006, 27/2013 08/2014 மற்றும் 29/2017 ஆகியவற்றின் விதிகளுக்கு இணங்க இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

2. 09/2006ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி, பின்வரும் இடைநிலை மட்டத்திலான கல்விசாரா பணியாளர்கள் ஒரு நாளைக்கு 7 மணி 45 நிமிடங்கள் பணியாற்ற வேண்டும்.
   i. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள்
   ii. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த அலுவலர்கள்
   iii. இலங்கை நூலகர் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள்
   iv. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள்
   v. துறை சார் உத்தியோகத்தர் (அபிவிருத்தி உதவியாளர்/நிதி உதவியாளர்/ திட்டமிடல் உதவியாளர்/ முகாமைத்துவ உதவியாளர் சேவைகளைச் சேர்ந்த அலுவலர்கள்)
   vi. அரச முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (பகுதி II பணியாளர் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் (ஆவணப்படுத்தல் உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர், தொழில்நுட்பப் பீட உதவியாளர்)

3. மேலும், பின்வரும் கனிஷ்ட ஊழியர்கள் நாள் ஒன்றுக்கு 08 மணி நேரம் 45 நிமிடங்கள் பணியமர்த்தப்படவேண்டும்.
   i. அலுவலக உதவியாளர் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள்

ii. முதன்மை தொழில்நுட்பம் அல்லாத அலுவலர் வகையை சேர்ந்த அதிகாரிகள் (அலுவலக உதவியாளர், சேவை உதவியாளர் - சுகாதாரம், ஆய்வுகூட உதவியாளர், தொழில்நுட்பப் பீட உதவியாளர், நூலக உதவியாளர்)

4. அதன்படி, மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை எளிதாக்கும் வகையில் இந்த நேரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன, மேலும் பதவிகளுக்கேற்ப கடமை நேரங்கள் பின்வருமாறு.

**கல்வி சாரா ஊழியர்களின் கடமை நேரங்கள்**

| பதவி மற்றும் பணிபுரியும் இடம் | | சாதாரண கடமை நேரங்கள் | சாதாரண தினசரி பணி நேரங்கள் (மதிய உணவிற்கு ½ மணி நேரம் உட்பட) |
|---|---|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் துரை சார் உத்தியோகத்தர் | தேசிய பாடசாலைகள் | மு.ப. 7.30- பி.ப. 3.15 | 7 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 8.30 - பி.ப. 4.15 | |
| | ஆசிரிய கலாசாலைகள் | மு.ப. 8.30 - பி.ப. 4.15 | |
| | ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையங்கள் | மு.ப 8.30 - பி.ப 4.15 | |
| அரச நூலகர் | தேசிய பாடசாலைகள் | மு.ப 7.30 - பி.ப. 3.15 | 7 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 8.00 - பி.ப. 3.45 | |
| | ஆசிரிய கலாசாலைகள் | மு.ப. 8.00 - பி.ப. 3.45 | |
| சாரதி | தேசிய பாடசாலைகள் | மு.ப 7.00 - பி.ப. 4.00 | சனிக்கிழமைகளில் பணியமர்த்தப்பட்டால், தினசரி பணி நேரங்கள் வாரத்திற்கு நாற்பத்தைந்து (45) மணிநேரம், அதாவது ஒரு நாளைக்கு ஏழரை (7 ½) மணிநேரம் என அமைக்கப்பட வேண்டும். அதன்படி, பொது நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 27/2013-மூலமாக வெளியிடப்பட்ட உத்தரவுகளின்படி அந்தப் பணிக்கான பணி அட்டவணையைத் தயாரிக்க வேண்டும். |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | | |
| | ஆசிரிய கலாசாலைகள் | | |
| | ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையங்கள் | | |
| அலுவலக உதவியாளர் | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 8.00 பி.ப. 4.45 | 7 மணி 45 நிமிடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆசிரிய கலாசாலைகள் | மு.ப. 7.45 - பி.ப.. 4.30 | |
| ஆவண உதவியாளர் | தேசிய பாடசாலைகள் | மு.ப7.30 பி.ப. 3.15 | 7 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 8.30 - பி.ப.. 4.15 | |
| ஆய்வுகூட உதவியாளர் | தேசிய பாடசாலைகள் | மு.ப. 7.15 - பி.ப. 3.00 | 7 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப 7.45- பி.ப.. 3.30 | |
| தொழில்நுட்ப பீட உதவியாளர் | தேசிய பாடசாலைகள் | மு.ப. 7.15 - பி.ப.. 3.00 | 7 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 8.30- பி.ப.. 4.15 | |
| ஆய்வுகூட உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப பீட உதவியாளர் | தேசிய பாடசாலைகள் | மு.ப 7.00 பி.ப.. 3.45 | 8 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 7.30 பி.ப.. 4.15 | |
| நூலக உதவியாளர் | தேசிய பாடசாலைகள் | மு.ப. 7.00 - பி.ப.. 3.45 | 8 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 8.00 - பி.ப.. 4.45 | |
| | ஆசிரிய கலாசாலைகள் | மு.ப 7.45 - பி.ப. 4.30 | |
| பாடசாலை பாதுகாப்பாளர் | தேசிய பாடசாலைகள் | 9 மணிநேரம் | 9 மணி நேரங்கள் முழுநேர சேவையில் ஈடுபடவேண்டியதுடன் அதற்காக நிறுவனத் தலைவரினால் கடமை நேர அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | 9 மணிநேரம | |
| சேவை உதவியாளர் - சுத்திகரிப்பாளர்கள் முற்றும் பணி உதவியாளர் | தேசிய பாடசாலைகள் | மு.ப. 7.00 - பி.ப.. 3.45 | 8 மணி 45 நிமிடங்கள் |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | மு.ப. 8.00 பி.ப.. 4.45 | |
| | ஆசிரிய கலாசாலைகள் | மு.ப 8.00 - பி.ப. 4.45 | |
| சமையல்காரர் | தேசிய பாடசாலைகள் | 8 மணி 45 நிமிடங்கள் | 8 மணி 45 நிமிடங்கள் முழுநேர சேவையில் ஈடுபடவேண்டியதுடன் அதற்காக நிறுவனத் தலைவரினால் கடமை நேர அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். |
| | தேசிய கல்வியியற் கல்லூரிகள் | | |
| | ஆசிரிய கலாசாலைகள் | | |

5. இந்த சுற்றறிக்கையில் 04 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்படாத மாணவர் விடுதி அலுவலர்/உதவி விடுதி அலுவலர்/மருத்துவமனை உதவியாளர்கள் போன்ற விடுதி பணியாளர்களுககாக தற்போது சேவை அவசியத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் ஒழுங்குவிதிகள் அவ்வாறே பேணப்பட வேண்டும்.

6. இந்த சுற்றிக்கை 2026.06.01 ஆம் திகதி முதல் செல்லுபடியாகும்.

7. மேலும் 9/2006, 27/2013, 08/2014 மற்றும் 29/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் எவ்வித மாற்றங்களும் இன்றி அவ்வாறே தொடரும்.

நாலக்க கலுவெவ
செயலாளர்